மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி சொன்ன உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வழித்தடங்களைக் கேட்கிறார். புதிய பேருந்துகள் வரும்போது அவர் சொன்ன வழித்தடங்களில் எந்த அளவிற்கு பேருந்து இயக்குவது சரியாக இருக்கும் என்பதனை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

குடமுழுக்கு

***66393—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருவாஞ்சியம் அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலின் குடமுழுக்குப் பணிகளை விரைவாக முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாஞ்சியம் பகுதியிலே அமைந்திருக்கின்ற வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்யப்படுமா என்ற வினாவிற்கு விடையாக அந்தத் திருக்கோயிலிலே 23 பணிகள் 61 இலட்சம் ரூபாய் செலவிலே உபயதாரர்கள் நிதியிலே நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 5 பணிகள் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நம்முடைய

2023 ஏப்ரல் 1]

அறம் சார்ந்த நிதியிலிருந்து எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு, சூரிய ஒளியின் வாயிலாக மின்சாரத்தைப் பெறுகின்ற பணி, பசு மடம் போன்ற 5 பணிகள் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. அந்தத் திருக்கோயிலுக்குப் பாலாலயம் நடந்தேறியிருக்கின்றது. ஆகவே, ஓர் ஆண்டிற்குள் அந்தப் பணிகளை நிறைவேற்றித் தருவதற்குண்டான முயற்சியை இந்து சமய அறநிலையத் துறையும், அந்தத் திருக்கோயிலின் இணை ஆணையாளரும் மேற்கொள்ள வேண்டுமென்று முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. வெகு விரைவில் திருப்பணிகளை நிறைவேற்றித் தந்து, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த திருவாஞ்சியம் அருள்மிகு மங்களாம்பிகை உடனுறை ஸ்ரீவாஞ்சிநாதர் சுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஸ்ரீவாஞ்சிநாதர் சுவாமி திருக்கோயிலைப் பொறுத்தவரை, காசியைவிட வீசம் அதிகம் என்று சொல்வார்கள். உலகத்திலே எமனுக்கென்று தனி சந்நிதி உள்ள ஒரே திருக்கோயில் ஸ்ரீவாஞ்சிநாதர் சுவாமி திருக்கோயில். எமனே ஈசனுக்கு வாகனமாக அமர்ந்திருக்கிறார். அங்கு பாம்பு கடித்து இதுவரையில் யாருமே இறந்தது கிடையாது. அதைச் சுற்றி வயல் காடுகள். வயல்வெளிகளை சுற்றுப்புறமாகக் கொண்ட அந்தப் பகுதியில் நாணல் காடுகளெல்லாம் அதிகமாக இருக்கின்றன. இருந்தபோதிலும், இதுவரை பாம்பு கடித்து அந்த

ஊரிலே யாருமே இறந்தது கிடையாது. அந்தளவுக்குப் பிரசித்தி பெற்ற ஸ்தலமான ஸ்ரீவாஞ்சிநாதர் சுவாமி திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்வதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ரூ.94.65 இலட்சம் செலவில் உபயதாரர் நிதியில் திருப்பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் மெதுவாக நடைபெறுகின்றன. 6–3–2022 அன்று பாலாலயம் செய்யப்பட்டு, திருப்பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. ஓராண்டாகியும், இதுவரை வெறும் 20 சதவிகிதப் பணிகள்தான் நடந்திருக்கின்றன. அதை விரைவுபடுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதுமட்டுமல்லாமல், அந்தச் சுற்றுச்சுவரை, அதாவது அந்தப் பகுதியில் இருக்கிற வெளிச்சுற்றுப் பிரகாரத்திற்கு கருங்கல் திருப்பணி அறநிலையத் துறை நிதியின் மூலமாக செய்து தர வேண்டுமென அன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலைப் பொறுத்தளவில், 3 சுற்றுப் பிரகாரம் வருகிறது. அதில், இரண்டு நல்ல நிலையில் இருப்பதாக ஏற்கெனவே அறிக்கை தந்திருக்கின்றார்கள். ஒரு சுற்றுப் பிரகாரத்திற்கு 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் பணி 50 சதவிகிதத்துக்கு மேலாக முடிவுற்றிருப்பதால், தற்போது அதை மாற்றி, கருங்கல் அமைக்கின்ற பணிக்குச் சென்றால், உபயதாரர் நிதியில் செய்யப்படுகின்ற பணி என்பதால், அதற்கு ஆட்சேபனை வருமென்ற காரணத்தினால், ஏற்கெனவே முடிவுற்றிருக்கின்ற அந்த இரண்டு சுற்றுப் பிரகார தலப் பணிகளில், அவற்றை கருங்கல்லாக மாற்றுவதற்குண்டான கருத்துரு பெறப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள். சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

2023 ஏப்ரல் 1]

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவள நாட்டில் பஞ்ச ஆரண்ய தலங்கள் என்று 5 திருத்தலங்கள் இருக்கின்றன. ஒரே நாளில் அந்த 5 திருத்தலங்களையும் தரிசனம் செய்யக்கூடிய, அதாவது விடியற்காலையில் ஆரம்பித்து இராக்காலம் வரை, 5 காலங்களிலும் தரிசிக்கக்கூடிய ஒரே நேர்கோட்டில் 5 சிவத் தலங்கள் அமைந்திருக்கின்றன. அதிலே இரண்டாவது தலமான அவளிவநல்லூர் சட்டநாதர் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு, குடமுழுக்கு செய்வதற்கு பணிகள் தொடங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. டெண்டர் விடப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, உடனடியாக அந்தப் பணிகளைத் தொடங்கி நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்குடி பகுதியில் ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் அமைந்திருக்கக்கூடிய அதே பகுதியில், அபய வரதராஜ பெருமாள் என்கிற பெருமாள் கோயில் அமைந்திருக்கிறது. அந்தப் பெருமாள் கோயிலுக்கு மொட்டை கோபுரம்தான் இருக்கிறது. அதற்கு இராஜ கோபுரம் அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சட்டநாதர் திருக்கோயில் என்பது பஞ்ச ஆரண்ய ஸ்தலங்களில் வனம் சார்ந்த திருக்கோயிலில் அது இரண்டாவது திருக்கோயில் ஆகும். அந்த வனம் சார்ந்த திருக்கோயிலில் முல்லைவனம் என்பது முதல் திருக்கோயில்; பாதிரிவனம் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சட்டநாதர் திருக்கோயில்; அடுத்து, வன்னிவனம், பூளைவனம், வில்வவனம் என்று 5 திருக்கோயில்களை உள்ளடக்கிய வன ஸ்தலங்களைச் சார்ந்த திருக்கோயில் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய குடமுழுக்குக்கு உண்டான திருப்பணிகள், வருகின்ற 16–4–2023 அன்று பாலாலயம் செய்யப்பட இருக்கின்றது. 5 பணிகள் சுமார் 34 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

[2023 ஏப்ரல் 1

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு உறுப்பினரே அந்த பாலாலயத்தில் கலந்து கொண்டு, அந்தத் திருக்கோயிலுக்குண்டான திருப்பணியைத் துவக்கி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். வரதராஜபெருமாள் திருக்கோயிலில், மொட்டைக் கோபுரம் இருப்பதாக தெரிவித்தார். அத்திருக்கோயில் 300 ஆண்டுகள் பழமையான திருக்கோயில் என்பதால், அதைத் தொல்லியல் வல்லுநர் குழுவை ஆய்வுச் செய்ய சொல்லி, அந்த மொட்டைக் கோபுரத்தின் ஸ்திரத்தன்மையை ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் மூன்று நிலை இராஜகோபுரமாகக் கட்டித் தருவதற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை முயற்சிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இதுவரையில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் உள்பட ஏழு நிலை இராஜகோபுரங்கள் இரண்டும், ஐந்து நிலை இராஜகோபுரங்கள் இரண்டும், மூன்று நிலை இராஜகோபுரங்கள் இரண்டும் என்று 6 திருக்கோயில்களின் இராஜகோபுரங்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றன. கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 7 திருக்கோயில்களுக்கான அந்த அறிவிப்பின்போது நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட ஒரு திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கேட்டார்கள். அந்த இராஜகோபுரம் உள்பட 7 திருக்கோயில்களுக்கு–36 கோடி ரூபாய் செலவில் 2022–2023 ஆம் ஆண்டிற்குண்டான அறிவிப்பிலே வெளியிடப்பட்டு, அந்தப் பணிகளும் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இராஜராஜ சோழன் காலத்தில் நடைபெற்ற திருப்பணிகளுக்கு இணையாக, நம்முடைய நிகழ்கால இராஜராஜ சோழன் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட தெள்ளாறு ஒன்றியத்தில், திருமால்பாடி என்ற கிராமம் உள்ளது. அந்தத் திருமால்பாடி கிராமத்தில் 1,136 ஆம் ஆண்டு இராஜராஜ சோழனின் வாரிசு பராந்தகச் சோழனின் மகன் விக்கிரமச் சோழனால் கட்டப்பட்ட திருக்கோயில் அரங்கநாயகி சமேத அரங்கநாதர் திருக்கோயில். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயிலுக்கு நீண்ட நாட்களுக்கு முன்பாக குடமுழுக்கு செய்யப்பட்டு, பராமரிப்பின்றி காணப்படுகிறது. உடனடியாக இந்தத் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருக்கோயிலுக்கு அருகில் 76.72 ஏக்கர் நிலப்பரப்பில் கோயிலுக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதியும், சுற்றுவட்டார கிராம மக்கள் பயன்பெறும்வகையில் ஒரு திருமண மண்டபமும் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. அம்பேத்குமார் அவர்கள், ஒரு கல்லிலே இரண்டு மாங்காய்கள் என்பதுபோல், ஒரே கேள்வியில் மூன்று கேள்விகளைத் தொடுத்திருக்கிறார். இராஜராஜ சோழனுக்குப் பிறகு பராந்தகச் சோழன், விக்கிரமச் சோழன் என்று மன்னர்கள் திருப்பணிகளை மேற்கொண்ட திருக்கோயில் என்று குறிப்பிட்டார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதைக் கருத்தில்கொண்டுதான்–நேற்றுக்கூட இதே சட்டமன்றத்தில் நான் எடுத்துக் கூறினேன்–ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களை முழுமையாக ஆய்வு செய்ய உத்தரவிட்டார்கள். அந்தவகையில், 509 திருக்கோயில்கள் 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் என பட்டியலிடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அரசின் சார்பிலே ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 47 திருக்கோயில்கள் தற்போது*

குடமுழுக்குக்கு, திருப்பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதுமாத்திரமல்லாமல், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு உபயதாரர்கள் தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்து அதிகப்படியான திருப்பணிகள் செய்வதற்கு ஆர்வமாக வந்துகொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களால் வழங்கப்படுகின்ற நிதி முறையாக அந்தத் திருப்பணிகளுக்குச் செலவிடப்படுவதால் அதிகளவு உபயதாரர்களைப் பெற்று, கடந்த ஆண்டு மாத்திரம் 66 திருக்கோயில்களுக்கான திருப்பணிகளுக்கு உபயதாரர்களுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அனுமதியளித்திருக்கிறது. அந்தவகையில் 66 திருக்கோயில்கள் என்று எடுத்துக்கொண்டால், ஒட்டுமொத்தமாக 113 திருக்கோயில்கள் கடந்த ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மீண்டும் தமிழக முதல்வர் அவர்கள் போதிய அளவில் நிதி தருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திருக்கோயில் திருப்பணி 2023–2024 ஆம் ஆண்டு நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும். அவர் கூடுதலாக திருமண மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதி கேட்டார். முதலில் தெய்வத்திற்குத் திருப்பணியும், குடமுழுக்கும் இறுதி செய்வோம். அதன்பிறகு பக்தர்கள் தங்கும் விடுதியும், திருமண மண்டபத்தையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை கருணையோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

அடக்கஸ்தலம்

***18946—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—